# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **அலுவலக மொழிகள் - அட்டவணை VIII**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - I முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# அலுவலக மொழிகள் - அட்டவணை VIII

## அலுவலக மொழிகள்

- இந்திய அரசமைப்புச்சட்டத்தில் பகுதி XVII-ல் சரத்து 343-351ல் மத்திய அரசியல் அலுவலக மொழி அல்லது ஆட்சி மொழி பற்றி கூறப்பட்டுள்ளது. தேவனகிரி முறையில் எழுதப்படும் இந்தி ஆட்சி மொழியாக இருக்கும் என்று கூறுகிறது. எனினும் அரசமைப்பு சட்டம் அறிவிக்கப்பட்டு 15 ஆண்டுகள் வரையிலும் ஆங்கிலம் அலுவலக மொழியாக இருக்கும் என்றும் வழிவகை செய்யப்பட்டு இருந்தது.
- 1955 இல் **B.G. கெர்**இதற்கான குழு அமைக்கப்பட்டது
- நாடாளுமன்றம் அலுவலக மொழிச்சட்டம் ஒன்றை 1963ல் ஏற்படுத்தி இந்தியுடன் கூடுதலாக ஆங்கிலம் தொடர வழிகோலியது. மேலும் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இரு மொழியிலும் இருக்கும் என்று கூறப்பட்டது.
- அரசமைப்புச்சட்டம், மாநிலங்கள் ஏதேனும் ஒன்று அல்லது பல மொழிகளை மாநில அலுவலக மொழியாக ஆக்கிக் கொள்ளலாம் என்று கூறியுள்ளது. அதனடிப்படையில் முதலில் 14 மொழிகள் மண்டல மொழிகளாக 8வது அட்டவணையில் இடம் பெற்றிருந்தது. தற்பொழுது 22 மொழிகள் மண்டல மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு 8வது அட்டவணையில் இடம் பெற்றுள்ளது.
- 2003ல் போடோ, மைதிலி, சந்தாலி, டோக்ரி ஆகிய மொழிகள் சேர்க்கப்பட்டன.

## மொழிவாரி சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரி

- இது 1956ல் ஏழாவது அரசமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் சரத்து **350** சேர்த்ததின் மூலம் கொண்டு வரப்பட்டது. மொழிவாரி சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரி குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார். மொழிவாரி சிறுபான்மையினருக்கு அரசமைப்பால் வழங்கப்பட்டுள்ள அனைத்து பாதுகாப்புகளையும் உறுதி செய்வது இவரது பணியாகும். இவர் தனது அறிக்கையை சிறுபான்மையினருக்-கான அமைச்சர் மூலம் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கிறார். குடியரசுத்தலைவர் இவ்வறிக்கையை நாடாளுமன்ற இரு அவைகளிலும்

சமர்ப்பிப்பதோடு சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கும் அனுப்பி வைப்பார்.

- 1957ல் இவ்வலுவலகம் உருவாக்கப் -பட்டது. இதன் தலைமையகம் அலகாபத்தில் உள்ளது. அரசமைப்புச் சட்டத்தில் வழங்கியுள்ள சலுகை -களையும், தேசிய அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டங்களையும் மொழிவாரி சிறுபான்மையினருக்கு செயல்படுத்துவது இவரது பணியாகும்.
- **சரத்து - 343** - யூனியன் ஆட்சிமொழி
- **சரத்து - 345** - மாநிலத்தில் ஆட்சிமொழி
- **சரத்து - 346** -ஆங்கிலம் மத்திய மாநில அரசிற்கு இடையான இணைப்பு மொழி
- **சரத்து - 348** - ஆங்கில மொழி உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், பாராளுமன்றம் மாசோதவுக்கு அனைத்து நடவடிக்கைகளிலும் இருக்கலாம்.
- **சரத்து 350-** அவர்களுடைய தாய்மொழியை அரசுக்கு எடுத்து உரைத்தல்.
- **(350- A)-** அவர் அவர்களுடைய தாய்மொழியை சிறுவயதில் கற்றுக் கொடுக்க வேண்டும்.